உ

# சேந்தன் திவாகரம்

## முதலாவது

# தெய்வப்பெயர்த்தொகுதி.

(க) சூத்திரம்.

சங்கரனிறையோன்காமதகநன், கங்காதரனே கறைமிடற்றண்ணல், கூற்றையுதைத்தோன் குன்றவில்லி, யேற்றுவாகனன் றிரியம்பகன்சோதி, நக்கன்சடையோ னாரிபாகன், முக்கட்பகவன் பசுபதிபரமன், கொன்றைசூடி கொலைமழுவாளி, யிமத்தாடி பிஞ்சகன் பித்த, னானையுரித்தோ னான் சிவனுருத்திரன், காலகாலன் கபால மூர்த்தி, நீலகண்டனீறணிகடவு, ளரவாபரணனழலாடி, பிறையதுசூடி பெருமானுமாபதி, யழலேந்தி யமலனானந்தன், பாசுபாணி சுடலையாடி, மானிடமேந்தி மறைமுதல்யோகி, புலித்தோலுடையோன் புரமூன்றெரித்தோன், பிநாகபாணி பேயோடாடி, பூதநாதன்புண

பெயர்ப்பிரிவு.

சிவன்பெயர்.

சங்கரன் - இறையோன் - காமதகநன் - கங்காதரன் - கறைமிடற்றண்ணல் - கூற்றையுதைத்தோன் - குன்றவில்லி - ஏற்றுவாகநன் - திரியம்பகன் - சோதி - நக்கன் - சடையோன் - நாரிபாகன் - முக்கட்பகவன் - பசுபதி - பரமன் - கொன்றைசூடி - மழுவாளி - ஈமத்தாடி - பிஞ்சகன் - பித்தன் - யானையுரித்தோன் - ஆன் - சிவன் - உருத்திரன் - காலகாலன் கபாலமூர்த்தி - நீலகண்டன் - நீறணிகடவுள் - ஆரவாபரணன் - அழலாடி - பிறைசூடி - பெருமான் - உமாபதி - அழலேந்தி - அமலன் - ஆநந்தன் - பாசுபாணி - சுடலையாடி - மானிடமேந்தி - மறைமுதல் - யோகி - புலித்தோலுடையோன் - புரமூன்றெரித்தோன் - பிநாகபாணி - பேயோடாடி - பூதநாதன் -

சூத்திரம். | பெயர்ப்பிரிவு.

ர்கங்காளன், ஞானமூர்த்தியீச
னநாதி, யைம்முகன் பகவனாதி
பாண்டரங்க, னந்திவண்ணனால
மர்கடவு,ணந்திநம்பனாதன்றற்
பரன், கண்ணுதன்மூர்த்திகை
லையாளியென், றெண்ணிய நா
மமின்னவும்பலவே.

கங்காளன்-ஞானமூர்த்தி-ஈசன்
-அநாதி - ஐம்முகன்-பகவன்-
ஆதி-பாண்டரங்கன் - அந்திவ
ண்ணன்-ஆலமர்கடவுள்- நந்தி
- நம்பன்-நாதன்-தற்பரன்-க
ண்ணுதல்மூர்த்தி-கைலையாளி.
[ஆ ௩௪.

(௨) சூ.

திருமால்பெயர்.

மாயோன் மாதவ னாரணன்
கேசவன்,சீதரன்றிருமகள்பூமி
கொழுநன், விண்டு விறலரி திரி
விக்கிரம, னுந்திபூத்தோ னுவ
ண முயர்த்தோன் , வாமனன்க
ண்ணன்கோவிந்தனச்சுத,னாழ்
கடற்றுயின்றோனாவணிச் செ
ல்வன்,சக்கராயுதனேசங்கமே
ந்தி, கருங்கடல்வண்ணன்கமல
க்கண்ணன்,சார்ங்கபாணிதகுப
ஞ்சாயுத,னுலகமுண்டோனுல
கினையளந்தோ, னரசிங்க னாதி
வராகன்,பதுமநாபன்மதுசூத
நனொடு,தாமோதரனேதகுபீ
தாம்பரன்,காவற்கடவுண்முரா
ரிமுகுந்தன், பெருமான் பிரம
ன் றந்தையென்றிவைமுதற்,றி
ருமாற்கநந்தஞ் சிறந்த தொல்
பெயரே.

மாயோன்-மாதவன் - நார
ணன்- கேசவன்-சீதரன்- திரு
மகள்கொழுநன்-பூமிகொழுந
ன்-விண்டு-அரி - திரிவிக்கிரம
ன்-உந்திபூத்தோன்-உவணமு
யர்த்தோன்-வாமனன்-கண்ண
ன்-கோவிந்தன்- அச்சுதன்-க
டற்றுயின்றோன் - ஆவணிச்
செல்வன்-சக்கராயுதன் - சங்க
மேந்தி-கடல்வண்ணன்- கமல
க்கண்ணன்-சார்ங்கபாணி-பஞ்
சாயுதன் - உலகமுண்டோன்-
உலகினையளந்தோன்- நாரசி
ங்கன்-ஆதி-வராகன்-பதுமநா
பன்-மதுசூதனன் - தாமோத
ரன்-பீதாம்பரன்- காவற்கட
வுள்-முராரி-முகுந்தன்-பெரு
மான்-பிரமன்றந்தை-
[ஆ ௩௮.

(௩) சூ.

பிரமன்பெயர்.

உந்தியிலுதித்தோனொளிம
லர்மிசையோ,னன்னவூர்தியன்

உந்தியிலுதித்தோன்-மலர்
மிசையோன் - அன்னவூர்தி -



சூத்திரம். | பெயர்ப்பிரிவு.

னமுயர்த்தோ, னான்முகன்மா
ன்மகனலங்கே ழெண்கணன்,
வானவர்முதல்வன்மண்பொது
த்தந்தை, யிறைவன் குரவன்ம
றையோன்விரிஞ்ச,னந்தணன்
ஞானனயன்வரன்றிசைமுகன்,
பிதாமகன்விதாதா கமலயோ
நி, வேதாப்போதன் விதிபர
மேட்டி, யிரணியகருப்பன்ப
டைப்போனிவைமுத,லாணிய
ல்பிரமற்கநந்தம்பெயரே.

அன்னமுயர்த்தோன்-நான்மு
கன்-மான்மகன்-எண்கணன் -
வானவர்முதல்வன்- மண்பொ
துத்தந்தை - இறைவன்-குரவ
ன்-மறையோன் - விரிஞ்சன்-
அந்தணன்-ஞானன்- அயன்-வ
ரன்-திசைமுகன்-பிதாமகன் -
விதாதா-கமலயோநி-வேதா-
போதன்-விதி - பரமேட்டி-
இரணியகருப்பன் - படைப்
போன். [ஆ ௨௭.

(௪) சூ.

இந்திரன்பெயர்.

புரந்தரன்புநிதன்பொன்ன
கர்க்கிறைவன், வாசவனமரர்
கோன்மான்முகிலூர்தி,வேள்வி
நாயகன்விண்முழுதாளி,யாயி
ரங்கண்ணனயிராணிகேள்வன்,
மருத்துவன்மகவான்வலாரிவிரு
த்திராரி,வெள்ளைவாரணனிமை
யவர்வேந்தன், பாகசாதனனாக
ண்டலனே,வச்சிராபாணிசதக்கி
ருதென்றிவை, யெச்சமிலிந்தி
ரற்கியன்றதொல்பெயரே.

புரந்தரன்-புநிதன்-பொன்
னகர்க்கிறைவன்- வாசவன்- அ
மரர்கோன்-மால்-முகிலூர்தி
- வேள்விநாயகன்- விண்முழு
தாளி-ஆயிரங்கண்ணன்-அயிரா
ணிகேள்வன்-மருத்துவன்-மக
வான்-வலாரி-விருத்திராரி-வெ
ள்ளைவாரணன்- இமையவர்வே
ந்தன் -பாகசாதனன்- ஆகண்ட
லன்-வச்சிராபாணி-சதக்கிருது.
[ஆ ௨௧.

(௫) சூ.

கணபதியின்பெயர்.

ஒற்றைக்கொம்பன்விநாயக
னைங்கரன்,வெற்றியானைமுகவ
ன்கணபதி,பாசாங்குசதரனாகு
வாகனனே.

ஒற்றைக்கொம்பன்-விநாய
கன்-ஐங்கரன்-யானைமுகவன்-
பாசாங்குசதரன்-ஆகுவாகனன்
[ஆ ௬.

(௬) சூ.

முருகன்பெயர்.

முருகன்சூர்ப்பகை செட்டி
குமர, னறுமீன் காதலன் சேவ
லங்கொடியோன், கார்த்திகே
யன் கடம்பன் சுவாமி, வேலு
டைக் கடவுண் மேலவர்க்கிறை
வ

சூர்ப்பகை- செட்டி-குமர
ன்-அறுமீன்காதலன்- சேவல
ங்கொடியோன்-கார்த்திகேய
ன்-கடம்பன்- சுவாமி - வேலு
டைக்கடவுள்- மேலவர்க்கிறை
வ

சூத்திரம்.

வன்,வரைபகவெறிந்தோன்வ
ள்ளிமணாள,னான்மகன்குறிஞ்
சிமன்சரவணத்துதித்தோ, ன
று முகன்விசாகன்குகன் சேய்
செவ்வே,டேவர்சேநாபதிமயி
லாளிசேந்தன், கந்தன்காங்கே
யன்வேளெனச்செப்புவர்.

பெயர்ப்பிரிவு.

வன் - வரைபகவெறிந்தோன் -
வள்ளிமணாளன் - ஆறன்மக
ன் - குறிஞ்சிமன் - சரவணத்து
தித்தோன் - ஆறுமுகன் - விசாக
ன் - குகன் - சேய் - செவ்வேள் -
தேவர்சேநாபதி - மயிலாளி -
சேந்தன் - கந்தன் - காங்கேய
ன் - வேள். ஆ ௨௧.

(௭) சூ.

வேனிலாளி வேண்மதன நங்
கன், மாரன்பூவாளி மந்மதன்
கந்தர்ப்பன், பஞ்சபாணன்கரு
ப்புவில்லி, யிரதிகாந்தன்மகர
முயர்த்தோன், றிருமால்புதல்
வன்வசந்தனென்றிவை,வருமா
ல்காமற் கியன்றவண்பெயரே.

காமன்பெயர்.

வேனிலாளி - வேள் - மதன் -
அநங்கன் - மாரன் - பூவாளி - மந்
மதன் - கந்தர்ப்பன் - பஞ்சபா
ணன் - கருப்புவில்லி - இரதிகாந்
தன் - மகரமுயர்த்தோன் - திரு
மால்புதல்வன் - வசந்தன்.

[ஆ ௰௪.

(௮) சூ.

வைரவன்காரிவடுகக்கடவுள்.

வைரவன்பெயர்.

காரி - வடுகக்கடவுள். ஆ ௨.

(௯) சூ.

கோழிக்கொடியோன் சாத
வாகநன், காரி சாத்தன் கடனி
றவையன்.

ஐயனார்பெயர்.

கோழிக்கொடியோன் - சாத
வாகநன் - காரி - சாத்தன். ஆ ௪.

(௰) சூ.

மந்திரிகுபேரனிதிக்கோனி
யக்கன், பிங்கல னாற்குப் பிரி
யாத்தோழன், வடதிசைத்தலை
வ னியக்கர் வேந்த,னளகையா
ளி யாய் முற் காவலன், புட்பக
வூர்தி தநதன்மரகதனென,வை
ப்பநாமம்வைச்சிரவணற்கே.

வைச்சிரவண்ணன்பெயர்.

மந்திரி - குபேரன் - நிதிக்கோ
ன் - இயக்கன் - பிங்கலன் - ஆற்
குத்தோழன் - வடதிசைத்தலைவ
ன் - இயக்கர்வேந்தன் - அளகை
யாளி - ஆய்முற்காவலன் - புட்ப
கவூர்தி - தநதன் - மரகதன் -
ஆ ௰௫.

(௰௧) சூ.

அநகனசலனதி குணனபய,
னமைவனறிவனதிசயனமலன்,

அருகன்பெயர்.

அநகன் - அசலன் - அதிகுண
ன் - அபயன் - அமைவன் - அறி
வன் - அதிசயன் - அமலன் -





சூத்திரம்.

பூரணன்புங்கவன்புணர் முக்கு
டையோ, னசோகுடைச் செல்
வனண் ணறத்துவ, னாதியங்கட
வு ளறவாழி யந்தண, னரியணை
ச்செல்வ னருளாழி வேந்தன்,
பண்ணவன் பகவ னெண் குண
ன் மாசேநன், விண்ணவன்றே
வன்விறலோன்விளங்கொளிப்,
பொன்னெயி லுதன் பூமிசைந
டந்தோன்,முனிவன் வீரன்மு
தல்வன் புநிதன், காமற் காய்ந்
தோன்கமலவூர்தி,சினேந்திரன்
றிகம்பரன் சாந்தன் புண்ணிய
ன்,மூர்த்தியாசான்முழுதொரு
ங் குணர்ந்தோ, வரதன்சின
ன்வரனென்றிவை முதலா, வரு
கற்கின்னுமநந்தம்பெயரே.

பெயர்ப்பிரிவு.

பூரணன் - புங்கவன் - முக்குடை
யோன் - அசோகுடைச்செல்வ
ன் - அண்ணல் - தத்துவன் - ஆதி
யங்கடவுள் - அறவாழியந்தண
ன் - அரியணைச்செல்வன் - அரு
ளாழிவேந்தன் - பண்ணவன் - ப
கவன் - எண்குணன் - மாசேநன் -
விண்ணவன் - தேவன் - விறலோ
ன் - பொன்னெயிலுதன் - பூமி
சைநடந்தோன் - முனிவன் - வீ
ரன் - முதல்வன் - புநிதன் - காமற்
காய்ந்தோன் - கமலவூர்தி - சி
னேந்திரன் - திகம்பரன் - சாந்
தன் - புண்ணியன் - மூர்த்தி - ஆ
சான் - முழுதொருங் குணர்ந்
தோன் - வரதன் - சிநன் - வரன்.

[ஆ ௪௫.

(௰௨) சூ.

அண்ணல்வாமனருங்கலைநா
யகன்,புண்ணியமுதல்வனாதிபு
ங்கவன்,பாரின்மிசையோன்சா
ந்தன் புநிதன், பகவன்சைநன
றவன்மூர்த்தி,போதிவேந்தன்
சிநன்வரன்புத்த,னேகதேவன்
முக்குற்றங்கடிந்தோ,னருணெ
றிசாக்குஞ்செல்வனநந்த,லோ
சநன் வளர்ந்த பூமிசை நடந்
தோ,னகளங்கன்முத்தன் புண்
ணியமூர்த்தி,பஞ்சதாரைவிட்
டவணர்க்கூட்டிய,வெஞ்சவில்
பெருமாற்கின்னவும்பலவே.

புத்தன்பெயர்.

அண்ணல் - வாமன் - கலைநாய
கன் - புண்ணியமுதல்வன் - ஆதி -
புங்கவன் - பாரின்மிசையோ
ன் - சாந்தன் - புநிதன் - பகவன் -
சைநன் - அறவன் - மூர்த்தி -
போதிவேந்தன் - சிநன் - வரன் -
புத்தன் - ஏகதேவன் - முக்குற்
றங்கடிந்தோன் - அருணெறிசா
ர்க்குஞ்செல்வன் - அநந்தலோ
சநன் - பூமிசைநடந்தோன் - அ
களங்கன் - முத்தன் - புண்ணிய
மூர்த்தி. ஆ ௨௫.

(௰௩) சூ.

அந்தகன் றருமன்றென்

நமன்பெயர்.

அந்தகன் - தருமன் - தென்

சூத்திரம்.

திசைமுதல்வன், சண்டன்மறலி
கூற்றுச்சமன் ஞமன், செங்கோ
ற்கடவு ளியமனென் றிவை, தங்
கிய நமன்மேற்றரும் பெயரா
கும்.

(௰௪) சூ.

சண்டனுமறலியுங் கூற்றுஞ்
சமனுமென், றிந்தவகைப்பே
ர்காலற்குமாகும்.

(௰௫) சூ.

காமக் கோட்டி யம்பிகை
கௌரி, யாரியை சத்தி யயிரா
ணிபார்வதி, யிமயவல்லியுமை
யவள்பேரே.

(௰௬) சூ.

பகீரதிசாநவி வரநதிசுரநதி,
திரிபதகைமந்தாகினி யிவைகங்
கை.

(௰௭) சூ.

காடுகாண்மோடி காரிதாய்
கொற்றி,மாரிசூரிவடுகி மூதண
ங்கே.

(௰௮) சூ.

பொறிமா வாக்கஞ் செல்வி
பொன்பூமகள்,செய்யாளிந்தி
ரைதிருமகள்பெயரே, கமலைப
துமைவிமலைகோகநகை,பனை
யவுமவள்பெயராகுமென்ப.

(௰௯) சூ.

பாரதிவாணி பனுவலாட்டி,
வெண்டாமரையாள் வெள்ளை
மேனியாள், நான்முகன் கிழத்
தி நாமகள் கலைமகள், உலகமா
தா

பெயர்ப்பிரிவு.

திசைமுதல்வன்-சண்டன்-மற
லி-கூற்று-சமன்-ஞமன்-செங்
கோற்கடவுள்-இயமன். ஆ. ௰.

காலன்பெயர்.

சண்டன்-மறலி-கூற்று-சம
ன்- ஆ. ௪.

உமையவள்பெயர்.

காமக்கோட்டி-அம்பிகை-
கௌரி-ஆரியை-சத்தி-அயிரா
ணி-பார்வதி-இமயவல்லி.
[ஆ. அ.

கங்கையின்பெயர்.

பகீரதி-சாநவி-வரநதி-சுர
நதி-திரிபதகை-மந்தாகினி.
[ஆ. ௬.

காடுகாள்பெயர்.

மோடி-காரிதாய்-கொற்
றி-மாரி-சூரி-வடுகி-மூதணங்
கு. ஆ. எ.

திருமகள்பெயர்.

பொறி-மா-ஆக்கம்-செல்
வி-பொன்-பூமகள்-செய்யா
ள்-இந்திரை-கமலை-பதுமை-
விமலை-கோகநகை. ஆ. ௰௨.

சரச்சுவதியின்பெயர்.

பாரதி-வாணி-பனுவலாட்டி-
வெண்டாமரையாள்-வெள்ளை
மேனியாள்-நான்முகன்கிழத்
தி-நாமகள்-கலைமகள்-உலகமா
தா



சூத்திரம்.

தாவூர்பூவாகதி, ஞானமூர்த்தி
நற்பாமடந்தை,சாவித் திரியே
காயத்திரியென்,வாக்கின் செல்
வியைநோக்கியபெயரே.

(௨௰) சூ.

மூகடி தௌவைகலதி மூதே
வி, காக்கைக் கொடியாள் கழு
தைவாகநி, கேட்டைகெடலண
ங்குசேட்டைபெயரே.

(௨௧) சூ.

சுந்தரிசசியே யயிராணி பு
லோமசை,யிந்திரன்றேவிக்கெ
ய்தும்பெயரே.

(௨௨) சூ.

சூலியெண்டோளிதாருகவி
நாசநி,மாதரிவீரி கௌரிமுக்க
ண்ணி, பைரவிகுமாரி சாமுண்
டிசண்டிகை,யோகினிவேதாளி
யாமளைமாகாளி.

(௨௩) சூ.

கொற்றவையையைகார்த்தி
கைகௌரி, துர்க்கைசூலி மகிட
ற் காய்ந்தா, ணீலி யெண்டோ
ளி விந்தை சயமக, ளிருங்கலை
யூர்தியெழிலரியேறி, மேதித்த
லைமிசைவிசையயந்தரி, மாலுக்
கிளையாள்சக்கராயுதியே,பாலை
க்கிழத்திபண்ணம் பணத்தி, நா
ராயணியே கந்நிகுமரி,சீர்சால்
பகவதி சிறந்ததொல்பெயரே.

(௨௪) சூ.

வஞ்சநிமாயவள்வலவையிடா
கினி.

பெயர்ப்பிரிவு.

தா-பூவாகதி-ஞானமூர்த்தி-
பாமடந்தை-சாவித்திரி-காய
த்திரி. ஆ. ௰௪.

சேட்டையின்பெயர்.

மூகடி-தௌவை-கலதி-மூ
தேவி-காக்கைக்கொடியாள்-
கழுதைவாகநி-கேட்டை-கெ
டலணங்கு. ஆ. அ.

இந்திராணியின்பெயர்.

சுந்தரி-சசி-அயிராணி-புலோ
மசை. ஆ. ௪.

காளியின்பெயர்.

சூலி-எண்டோளி-தாருகவி
நாசநி-மாதரி-வீரி-கௌரி-
முக்கண்ணி-பைரவி-குமாரி-
சாமுண்டி-சண்டிகை-யோகி
னி-வேதாளி-யாமளை. ஆ. ௰௪.

பகவதியின்பெயர்.

கொற்றவை-ஐயை-கார்த்திகை-
கௌரி-துர்க்கை-சூலி-மகிட
ற்காய்ந்தாள்-நீலி-எண்டோ
ளி-விந்தை-சயமகள்-கலையூர்
தி-அரியேறி-மேதித்தலைமிசை
விசயை-அந்தரி-மாலுக்கிளை
யாள்-சக்கராயுதி-பாலைக்கிழ
த்தி-அம்பணத்தி-நாராயணி-
கந்நி-குமரி. ஆ. ௨௨.

இடாகினிபெயர்.

வஞ்சநி-மாயவள்-வலவை.
ஆ. ௫.

சூத்திரம்.

(உரு)

சந்திநிசூர்மகள்யோகிநியா
கும்.

(உசு) சூ.

அரம்பையரரமகளிரமரர்மாத
(உஎ) சூ. [ர்.

அணங்குஞ் சூருந் தெய்வப்
பெண்பொதுப்பெயர்.

(உஅ) சூ.

வானவரிமையவர்விண்ணவர்
கடவுள்,ரமரர்சுரர்புலவரண்டர்
புத்தேளி,ரையரும்பர்தேவர்க
ள்பொதுப்பெயர்,பண்ணவர்
பகவர் தீர்த்தர்பட்டாரகர்,புங்
கவரெனவுங்கடவுளர்பொதுப்
பெயர்.

(உகூ) சூ.

தானவரவுணர்தருவர்தைத்தி
யரென்,றினைய்நான்குநிசாசர
ருமசுரர்.

(௩0) சூ.

வைரோசநனே மாவலியவு
ணன்.

(௩க) சூ.

அரக்கரிராக்கதர்நிசாசரர் நி
ருதரென், றுரைத்த நான்கு
மொன்றன்பால, சாலகடங்கட
ரும் பிசிதாசநரும், யாதுதாந
வருமவ்வினத்தவரே.

(௩உ) சூ.

விஞ்சையர்கேசரர்வித்தியா
தரர்பெயர்.

பெயர்ப்பிரிவு.

யோகிநியின்பெயர்.

சந்திநி-சூர்மகள். ஆ உ.

அமரர்மாதர்பெயர்.

அரம்பையர்-அரமகளிர். (உ)

தெய்வப்பெண்பொதுப்
பெயர்.

அணங்கு-சூர். ஆ உ.

தேவர்கள்பொதுப்பெயர்.

வானவர்-இமையவர் - விண்
ணவர்-கடவுளர்-அமரர்-சுரர்-
புலவர்-அண்டர் - புத்தேளிர்-
ஐயர்-உம்பர்-பண்ணவர்-பக
வர்-தீர்த்தர்-பட்டாரகர்- புங்
கவர் ஆ ௰௬.

அசுரர்பெயர்.

தானவர்-அவுணர்- தருவர்-
தைத்தியர்-நிசாசரர். ஆ ரு.

மாவலியின்பெயர்.

வைரோசநன். (க)

—

அரக்கர்-இராக்கதர்- நிசாச
ரர்-நிருதர்- சாலகடங்கடர்-பி
சிதாசநர்-யாதுதாநவர். இவ்
வேழுமொருபொருட்பெயர்.

வித்தியாதரர்பெயர்.

விஞ்சையர்-கேசரர். ஆ உ.





சூத்திரம்.

(௩௩)

தந்திரர்கிந்நரர்வீணைவல்லவ
ர், கந்திருவர்பெயரெனக்கருத
ல்வேண்டும்.

(௩௪) சூ.

சாதகங்கிருத்திமங்குறள்கூ
ளிபாரிடம்,பூதகணமெனப்புக
ன்றனர்புலவர்.

(௩ரு) சூ.

கழுது சோகு கடி கண மண்
ணை,யலகைகூளி பிசாசு வேதா
ளம், பிரேதகஞ்சாவோ டிணங்
குகுணபாசியென், றினையவீரா
றும்பேயெனல்வேண்டும்.

(௩௬) சூ.

அந்தரமாசினியம்பரமங்கு,
லண்டம் வானங் ககநமீ வெளி,
விண்ணுநாகம் விசும்பு தலையு
ம்ப, ரிடங்குடிலென்றங் கிவை
பதினேழு, மடங்கலிலாகாயப்
பெயராகும்.

(௩எ) சூ.

வாதங்கூதிர் வங்கூழ் கால்வ
ளி, யூதைய நிலங் கோதை நீழ
லுலவைமாருதமருத்துப்பவந
ம்,வாடையொலிகூதையுயி
ர்ப்பே, வேற்றலங்கொண் டல்
கோடையென் றிருபதுங், காற்
றின்பெயரெனக் கருதல்வேண்
டும்.

(௩அ) சூ.

கூதிரு மூதையுங் குளிர்பனி
க்காற்றே.

பெயர்ப்பிரிவு.

கந்திருவர்பெயர்.

தந்திரர்-கிந்நரர்-வீணைவல்
லவர். ஆ ௩

பூதகணத்தின்பெயர்.

சாதகம்-கிருத்திமம்-குறள்.
கூளி-பாரிடம். ஆ ரு.

பேயின்பெயர்.

கழுது-சோகு-கடி-கணம்-
மண்ணை-அலகை-கூளி-பிசாசு-
வேதாளம்-பிரேதகம் - சாவு-
குணபாசி. ஆ ௰உ.

ஆகாசத்தின்பெயர்.

அந்தரம்-ஆசினி-அம்பரம்-
மங்குல்-அண்டம்-வானம்- கக
நம்-மீ-வெளி-விண் - நாகம்-
மாகம்-விசும்பு- தலை-உம்பர்-
இடம்-குடில். ஆ ௰எ.

காற்றின்பெயர்.

வாதம்-கூதிர்-வங்கூழ்-கால்-
வளி-ஊதை-அநிலம்-கோதை.
நீழல் - உலவை-மாருதம்-மரு
த்து-பவநம்-வாடை-ஒலி - கூ
தை - உயிர்ப்பு - வேற்றலம் -
கொண்டல்-கோடை. ஆ உ௰.

பனிக்காற்றின்பெயர்.

கூதிர்-ஊதை. ஆ உ.

சூத்திரம்.

(௩௯)
வாடைவடந்தை வடகாற்றாகும்.

(௪௰) சூ.
கோடைமேல்காற்று.

(௪௧) சூ.
கொண்டல்கீழ்காற்று.

(௪௨) சூ.
மந்தாநிலமேமலயக்காலே, தென்கால்வசந்தன் றென்றலென்றிசைப்பர்.

(௪௩) சூ.
சூறைசாரிகைசுழன்றெழுகாற்றே.

(௪௪) சூ.
அழலங் காரக னங்கி கனலி, யெரிதழ றபநன் பாவகன் றீய னல், செஞ்சுடர்ப்பகவன் ஞெகிழியுதாசந, னுதவகன்றநஞ் சயன்வசுவெழுநாவரி, தென்கீழ்த் திசையோன் வந்நிதேயுவென், றின் னவை பிறவு நெருப் பின் பெயரே.

(௪௫) சூ.
உத்தரமடங்கலூழித்தீயென, வைத்தகடையனல் வடவாமுகமே.

(௪௬) சூ.
தீபமுஞ்சுடரும்விளக்கெனச்செப்புவர்.

(௪௭) சூ.
புலிங்கமனற்பொறி.

(௪௮) சூ.
உற்கமனற்றிரள்.

பெயர்ப்பிரிவு.

வடகாற்றின்பெயர்.
வாடை-வடந்தை. ஆ ௨.

மேல்காற்றின்பெயர்.
கோடை. (௧)

கீழ்காற்றின்பெயர்.
கொண்டல். (௧)

தென்றலின்பெயர்.
மந்தாநிலம்-மலயக்கால்-தென்கால்-வசந்தன். ஆ ௪.

சுழல்காற்றின்பெயர்.
சூறை-சாரிகை. ஆ ௨.

நெருப்பின்பெயர்.
அழல்-அங்காரகன்-அங்கி-கனலி-எரி-தழல்-தபநன்-பாவகன்-தீ-அனல்-சுடர்ப்பகவன்-ஞெகிழி-உதாசநன்-உதவகன்-தநஞ்சயன்-வசு-எழுநா-அரி-தென்கீழ்த்திசையோன்-வந்நி-தேயு. ஆ ௨௧.

வடவாமுகாக்கிநியின்பெயர்.
உத்தரமடங்கல்-ஊழித்தீ-கடையனல். ஆ ௩.

விளக்கின்பெயர்.
தீபம்-சுடர். ஆ ௨.

அனற்பொறியின்பெயர்.
புலிங்கம். (௧)

அனற்றிரளின்பெயர்.
உற்கம். (௧)





சூத்திரம்.

(௪௯)
தாவங்காட்டெரி.

(௫௰) சூ.
ஆணிஞெலிகோ றீக்கடைகோலே.

(௫௧) சூ.
பாவகன் றீக் கடவுள்பெயரே.

(௫௨) சூ.
அறலும்புனலுமப்பும்பாணியு, முதகமுங்கமலமுமமுதமுங்கவந்தமும், பயமுஞ் சலிலமும்மளகமும், புவநமும்வநமுங் கோவுங் கீலாலமுங், காண்டமுந்தோயமுநாரமுநீரே.

(௫௩) சூ.
நீத்தம்பிளயம்வாரிவெள்ளநீர்.

(௫௪) சூ.
மற்றப்புனற்கரசன் வருணனாகும்.

(௫௫) சூ.
வெய்யோ னிருள்வலிபதங்கன் சூரியன், சுடரவன் றரணியுதயனாதவ, னெல்லை மார்த்தாண்டன்றிநகரன்பனிப்பகை, பரிதிசெங்கதிரலரிபாநு, வெஞ்சுடர்க்கிரணன் பகலவன்வேந்த, னாயிரங்கதிரோனழலவன்றிவாகர, னிரவி பாற்கரனென்றாழ

பெயர்ப்பிரிவு.

காட்டெரியின்பெயர்.
தாவம். (௧)

தீக்கடைகோலின்பெயர்.
ஆணி-ஞெலிகோல். ஆ ௨.

தீக்கடவுளின்பெயர்.
பாவகன். (௧)

நீரின்பெயர்.
அறல்-புனல்-அப்பு-பாணி-உதகம்-கமலம்-அமுதம்-கவந்தம்-பயம்-சலிலம்-அயம்-அளகம்-புவநம்-வநம்-கோ-கீலாலம்-காண்டம்-தோயம்-நாரம்- ஆ ௰௯.

வெள்ளநீரின்பெயர்.
நீத்தம்-பிளயம்-வாரி. [ஆ ௩.

புனற்கரசன்பெயர்.
வருணன். (௧)

அருக்கன்பெயர்.
வெய்யோன்-இருள்வலி-பதங்கன்-சூரியன்-சுடரவன்-தரணி-உதயன்.ஆதவன்-எல்லை-மார்த்தாண்டன்-திநகரன்-பனிப்பகை-பரிதி-செங்கதிர்-அலரி-பாநு-வெஞ்சுடர்க்கிரணன்-பகலவன்.வேந்தன்.ஆயிரங்கதிரோன்-அழலவன்-திவாகரன்.இரவி-பாற்கரன்.என்றாழ்-

சூத்திரம்.

ருண,னாதித்தன் கனலிஞாயிறு,
விரிச்சிகன்,சான்றோனரியேத
பநனென்றினையவு,மான்றவரு
க்கநக்கதந்தம்பெயரே.

(௫௬) சூ.

அம்புலிதிங்கள் குபேரனரு
ச்சிக,னிசாகரனிமகரனாலோன்
களங்கன், றண்சுடர்க்கலையோ
னிராக்கதிர்தாநவன், வியோம்
த்துடுபதி யமுதகிரண, னிந்து
சோமன்பிறைமதி சசிவி துவெ
ன,வந்தனபிறவு நிலவுஞ்சந்திர
ன்.

(௫௭) சூ.

அங்காரகன்குசனால்வக்கிர
ன், மங்கலனறிவன் செந்தீவண்
ணன்,பூமகனிலமகன்குருதிசே
ய்செவ்வாய், நாமமென்றுநவி
ன்றனர்புலவர்.

(௫௮) சூ.

அருணன்றாதுவனறவழிமே
தை, மதிமகன்பாகன்மாலவன்
கணக்கன், புந்தி புலவன் பண்
டிதன்சௌமியன், சிந்தைகூரி
யோனறிவன்புதனென, வந்த
நாமமற்றவற்காகும்.

(௫௯) சூ.

மந்திரியாசான் பிதகன் சுரா
குரு, வந்தண னாசனாண்டளப்
பான்பிரகற்பதி,சுந்தரப்பொ
ன்குருமறையோன் வியாழம்.

ப

பெயர்ப்பிரிவு.

அருணன் - ஆதித்தன்- கனலி-
ஞாயிறு-விரிச்சிகன்-சான்றோ
ன்-அரி-தபநன். [ஆ ௩௩

சந்திரன்பெயர்.

அம்புலி-திங்கள்- குபேரன்-
அருச்சிகன்- நிசாகரன் - இமக
ரன்-ஆலோன்- களங்கன் - தண்
சுடர்க்கலையோன்-இராக்கதிர்-
தாநவன் - உடுபதி- அமுதகிர
ணன்-இந்து-சோமன்-பிறை-
மதி-சசி-விது-நிலவு. ஆ ௨௰

செவ்வாயின்பெயர்.

அங்காரகன்-குசன்- ஆரல்-
வக்கிரன்-மங்கலன்- அறிவன்-
செந்தீவண்ணன்-பூமகன்- நில
மகன்-குருதி-சேய். ஆ ௰௧.

புதன்பெயர்.

அருணன்-தாதுவன் - அற
வழி-மேதை-மதிமகன்- பாக
ன்-மாலவன்-கணக்கன்-புந்தி-
புலவன்-பண்டிதன்-சௌமிய
ன்-சிந்தைகூரியோன் - அறிவ
ன். ஆ ௰௪.

வியாழத்தின்பெயர்.

மந்திரி-ஆசான் - பிதகன்-
சுராகுரு- அந்தணன் - அரசன்-
ஆண்டளப்பான் - பிரகற்பதி-
பொன் - குரு - மறையோன்.
ஆ ௰௧.

ப



சூத்திரம்.

(௬௰)

பளிங்குபார்க்கவன்புகர்புயன்
மழைக்கோள்,விளங்குதிங்கள்
பிரசுரான்சல்லிய,னெள்ளியோ
ன்சுங்கனசுரமந்திரியென, வெ
ள்ளிசிதன்பிருகுசுக்கிரன்பெய
ரே.

(௬௧) சூ.

மந்தன்காரிகரியோன் முட
வ,னந்தனீலன்கதிர்மகன் கீழ்ம
கன், பங்குமேற்கோள் சௌரி
முதுமகன்,சந்தில்சாவகன் சநி
யின்பெயரே.

(௬௨) சூ.

இராகுக்கோள்கரும்பாம்பு.

(௬௩) சூ.

கேதுக்கோள் செம்பாம்பு.

(௬௪) சூ.

அநந்தன்பெயரேசேடனாகும்.

(௬௫) சூ.

வருடையுதடகர்மறிமைகொ
றியென, விரியுமாட்டின் பேர்
மேடவிராசி.

(௬௬) சூ.

பாறல் புல்லம்பாண்டில்பசு
மூரி, யேறுமுதல்வந்தன விட
பவிராசி.

(௬௭) சூ.

பாடவையாடவையிரட்டை
சவைமகண், மெவு மியாழ்ப்ப
ல்பெயர்தண்டேமிதுநம்.

அ

பெயர்ப்பிரிவு.

சுக்கிரன்பெயர்.

பளிங்கு-பார்க்கவன்-புகர்-
புயல்-மழைக்கோள்- திங்கள்-
பிரசுரான் - சல்லியன் - வெள்ளி
யோன்-சுங்கன்-அசுரமந்திரி-
வெள்ளி-சிதன்-பிருகு.
[ஆ ௰௪.

சநியின்பெயர்.

மந்தன் - காரி - கரியோன்-
முடவன் - அந்தன்-நீலன்-கதி
ர்மகன்-கீழ்மகன்-பங்கு- மே
ற்கோள்-சௌரி- முதுமகன்-
சாவகன். ஆ ௰௫.

இராகுவின்பெயர்.

கரும்பாம்பு. (௧)

கேதுவின்பெயர்.

செம்பாம்பு. (௧)

அநந்தன்பெயர்.

சேடன். (௧)

மேடவிராசியின்பெயர்.

வருடை-உதள்-தகர்- மறி-
மை-கொறி. ஆ ௬. மற்றும்-
ஆட்டின்பேரனைத்துமாம்.

இடபவிராசியின்பெயர்.

பாறல்-புல்லம்-பாண்டில்-
பசு-மூரி-ஏறு. ஆ ௬. இவைமு
தலியபலபெயருமாம்.

மிதுநத்தின்பெயர்.

பாடவை- ஆடவை-இரட்டை-
சவைமகள்-யாழ் - தண்டு -
ஆ ௬. மற்றும்யாழின்பெய
ரெலாமாம்.

அ

## சூத்திரம்.

(௬௮)

அலவனள்ளிகுளிர்ஞெண்டார்மதி, கள்வனென்றிவைகர்க்கடகப்பெயரே.

(௬௯) சூ.

அரிமாபுலியையா நநம்யாளி, தெரியிற் புலிசியப்பல்பெயர்சிங்கம்.

(௭௰) சூ.

பெண்மைப்பெயரேகந்நிக்குமாகும்.

(௭௧) சூ.

நிறையேகட்டளைவாணிகனிறுப்பான், துலையே கோலெனத்துலாப்பெயர்பெறுமே.

(௭௨) சூ.

தெறுக்கால்பறப்பன்றேளே விருச்சிக, நலமென் பெயருந்தேளின்மேற்றே.

(௭௩) சூ.

சாபங்காண்டவந்தநுவின் பெயரே.

(௭௪) சூ.

மானேகலைசுறுமகரப்பெயரே.

(௭௫) சூ.

குடமே சாடிப் பெயரேகும்பம்.

(௭௬) சூ.

மீநமீனின்பலபெயர்பெறுமே.

## பெயர்ப்பிரிவு.

கர்க்கடகத்தின்பெயர்.

அலவன் - நள்ளி - குளிர் - ஞெண்டு - மதி - களவன். ஆக ௬.

சிங்கத்தின்பெயர்.

அரி - மா - புலி - ஐயா நநம் - யாளி - ஆக ௫. மற்றும்புலிசிய்ங்களின்பேரெலாமாம்.

கந்நியின்பெயர்.

பெண்பெயர்யாவுமாகும்.

துலாத்தின்பெயர்.

நிறை - கட்டளை - வாணிகன் - நிறுப்பான் - துலை - கோல் - ஆக ௬.

விருச்சிகத்தின்பெயர்

தெறுக்கால் - பறப்பன் - தேள் - நலம். ஆக ௪.

தநுவின்பெயர்.

சாபம் - காண்டவம். ஆக ௨.

மகரத்தின்பெயர்.

மான் - கலை - சுறு. ஆக ௩.

கும்பத்தின்பெயர்.

குடம் - சாடி - [ஆக ௨.

மீநத்தின்பெயர்.

மீன்பேரெல்லாமாம்.





ASIATI

## சூத்திரம்.

(௭௭)

இரலையைப் பசியா ரேறுதலைநாள், புரவிமருத்துவநாளச்சுவிநியென்ப.

(௭௮) சூ.

காடுகிழவோன்பூதமடுப்பே, தாழிபெருஞ்சோறு தருமனாள் போதமெனப், பாகுபட்டதுபரணிநாட்பெயரே.

(௭௯) சூ.

அங்கியாரலளக்கரளகிறால், பொங்கியநாடனாவிதன்வாணன், றங்கொளியறுமீன்றழனாள்கார்த்திகை.

(௮௰) சூ.

பண்டிபார் சகடுசாகாடுவையு, மொண்டிறலுருடேரயனாளுரோகிணி.

(௮௧) சூ.

மாழ்குபேராளன்மான்றலையிந்திரன், மார்கழிநரிப்புறமதிநாண் மும்மீன், பாலை வெய்யோன்மிருகசீரிடப்பெயர்.

(௮௨) சூ.

மூதிரைசெங்கை யாழீசர்திநமென, வாதிரைதன்பெய ராகுமென்ப.

(௮௩) சூ.

அதிதிநாண்மூங்கில்கரும்பாவணம்பாலை, புநிதம்பிண்டிபுநர்தம்புநர்பூசம்.

(௮௪) சூ.

கொடிறுகாற்குளஞ்சார்கு

## பெயர்ப்பிரிவு.

அச்சுவிநியின்பெயர்

இரலை - ஐப்பசி - புரம் - ஏறு - தலைநாள் - புரவி - மருத்துவநாள். ஆக ௭.

பரணிநாளின்பெயர்.

காடு - கிழவோன் - பூதம் - அடுப்பு - தாழி - சோறு - தருமனாள் - போதம். [ஆக ௮.

கார்த்திகையின்பெயர்.

அங்கி - ஆரல் - அளக்கர் - அளகு - இறால் - நாடன் - நாவிதன் - வாணன் - அறுமீன் - தழனாள். [ஆக ௰.

உரோகிணியின்பெயர்.

பண்டி - பார் - சகடு - சாகாடு - வையம் - உருள் - தேர் - அயனாள். ஆக ௮.

மிருகசீரிடத்தின்பெயர்.

மாழ்கு - பேராளன் - மான்றலை - இந்திரன் - மார்சழி - நரிப்புறம் - மதிநாள் - மும்மீன் - பாலை - வெய்யோன். ஆக ௰.

திருவாதிரையின்பெயர்.

மூதிரை - செங்கை - யாழ் - ஈசர்திநம். ஆக ௪.

புநர்பூசத்தின்பெயர்.

அதிதிநாள் - மூங்கில் - கரும்பு - ஆவணம் - பாலை - புநிதம் - பிண்டி - புநர்தம். ஆக ௮.

பூசநாளின்பெயர்.

கொடிறு - காற்குளம் - சார்கு

சூத்திரம்.

ருநாள்வண்டு, புணர்வ தாகும்
பூசநாட்பெயரே.

(௮௫) சூ.

ஆவினாள் கௌவையாயிலி
யப்பேர்.

(௮௬) சூ.

வேட்டுவன்கொடு நுகமெழு
வாயெழுஞ்சநி,வாய்க்கால்பிதி
ர்நாண்மாசிமகமாகும்.

(௮௭) சூ.

இடைய தெழுஞ்சநி யெலி
யே தூர்க்கை, புகவதி நாணுவி
தன்கணையேபூரம்.

(௮௮) சூ.

பங்குனிகடைய தெழுஞ்சநி
பாற்குநி, மானேறு கதிர் நாளு
த்தரமாகும்.

(௮௯) சூ.

கைம்மீன்காமரங்களிறுகௌ
த்துவ,நவ்விகந்நியை விரலத்த
[ம்.

(௯௰) சூ.

நெய்வான்மீன் சுவைபயற்
றெடுநேர்வான், செவ்விதிற்று
வட்டாநாள்சித்திரையென்ப.

(௯௧) சூ.

விளக்கே வீழ்க்கை வெறுநு
கமரக்கா, றுளக்கமில்நிலநாள்
சோதிநாளாகும்.

(௯௨) சூ.

முறமேமுற்றில்வைகாசியநி
லநாள்,பெறுமேசுளகுவிசாக
நாட்பெயரே.

பெயர்ப்பிரிவு.

ருநாள்-வண்டு. ஆ. ௬.

ஆயிலியத்தின்பெயர்.

ஆவினாள்-கௌவை. ஆ. ௨.

மகத்தின்பெயர்.

வேட்டுவன்-கொடு நுகம்-எ
ழுவாயெழுஞ்சநி- வாய்க்கால்-
பிதிர்நாள்-மாசி. ஆ. ௬.

பூரத்தின்பெயர்.

இடையெழுஞ்சநி-எலி- தூ
ர்க்கை-பகவதிநாள்-நாவிதன்-
கணை. ஆ. ௬.

உத்தரத்தின்பெயர்.

பங்குனி-கடையெழுஞ்சநி-
பாற்குநி-மானேறு-கதிர் நாள்
ஆ. ௫.

அத்தத்தின்பெயர்.

கைம்மீன் - காமரம் - களிறு-
கௌத்துவம்-நவ்வி-கந்நி - ஐ
விரல். ஆ. ௭.

சித்திரைநாளின்பெயர்.

நெய்வான்-மீன்-சுவை-பய
று-நேர்வான்-துவட்டாநாள்.
[ஆ. ௬.

சோதிநாளின்பெயர்.

விளக்கு-வீழ்க்கை-வெறுநு
கம்-மரக்கால்-அநிலநாள்.
ஆ. ௫.

விசாகநாளின்பெயர்.

முறம்-முற்றில்- வைகாசி-
அநிலநாள்-சுளகு. ஆ. ௫.





சூத்திரம்.

(௯௩) ———

பனைதேள்பெண்ணைபுற்று
போந்தை, மித்திர நாளிவையநு
டப்பெயரே.

(௯௪) சூ.

துளங்கொளி வல்லாரை வே
தியெரிதழல், கிளந்தவிந்திராணு
ள்பின்மூக்கேட்டை.

(௯௫) சூ.

கொக்கேதேட்கடை குருகு
வில்லன்றின், மூற்றுமானியசுரா
நாண்மூலம்.

(௯௬) சூ.

உடைகுள்முற்குள நீர் நாள்
பூராடம்.

(௯௭) சூ.

ஆடியானி கடைக்குளம் விச்
சுவ்நா, ளாடியுத்தராட நாளா
கும்மே.

(௯௮) சூ.

நலத்தகுவயிர நள்ளே சிரவ
ண, முலக்கை சோணை மாயோ
னோணம்.

(௯௯) சூ.

ஆவணிகாக்கை பறவைபுள்வ
சுநாண், மேவியவவிட்ட மீனி
ன்பெயரே.

(௱) சூ.

குன்றுபோர்சுண்டன் பெ
ருஞ்செக்கு, தங்குவருண னுள்
சதயநாளாகும்.

பெயர்ப்பிரிவு.

அநுடத்தின்பெயர்.

பனை-தேள்-பெண்ணை-புல்-
நாளி-போந்தை-மித்திரநாள்.
[ஆ. ௭.

கேட்டையின்பெயர்.

வல்லாரை-வேதி-எரி- தழல்-
இந்திராணுள். ஆ. ௫.

மூலத்தின்பெயர்.

கொக்கு-தேட்கடை - குரு
கு-வில்-அன்றில்-ஆனி - அசுர
நாள். ஆ. ௭.

பூராடத்தின்பெயர்.

உடைகுளம்-முற்குளம்- நீர்
நாள். ஆ. ௩.

உத்தராடநாளின்பெயர்.

ஆடி-ஆனி - கடைக்குளம் -
விச்சுவநாள். ஆ. ௪.

திருவோணத்தின்பெயர்.

வயிரம்-நள்- சிரவணம்-உல
க்கை-சோணை - மாயோனுள்.
ஆ. ௬.

அவிட்டத்தின்பெயர்.

ஆவணி-காக்கை-பறவை- பு
ள்-வசுநாள். ஆ. ௫.

சதயநாளின்பெயர்.

குன்று-போர்-சுண்டன்-செ
க்கு-வருணனுள். ஆ. ௫.

சூத்திரம்.

(ாக)

புாட்டாதிமுற்கொழுங் கோல்பூாட்டாதி, யுரைப்பர்நாழியு மந்நாளுடனே.

(ாஉ) சூ.

மூாசுபிற்கொழுங் கோன்மன்னனிம்மூன்றினோ, டரைசெயறிவனுத்தரட்டாதி.

(ாரு) சூ.

தொழுவே நாவாய் தோணி சூலம், பஃறி புருடநாள் கடைமீனிரேவதி.

(ாச) சூ.

அருந்ததிசாலிவடமீனாகும்.

(ாரு) சூ.

உடுத்தாராகணமொளிவான் மீனே.

(ாசு) சூ.

துடியுங்கலையுந்தொடர்கால நட்பம்.

(ாஎ) சூ.

கன்னலுமிருத்தையுங் கடிகையும்பதமும், சொன்ன விகலையுநாழிகைத்தொல்பெயர்.

(ாஅ) சூ.

வேலையுமமையமுங்காலையும் பதமு, மெல்லையுங் காலமும் பொழுதெனப்படுமே.

(ாகூ) சூ.

நென்னலுநெருநலுமுன்னை நாளாகும்.

(ாய) சூ.

பிற்றையும்பின்றையும் பின்னை நாளாகும்.

பெயர்ப்பிரிவு.

பூரட்டாதியின்பெயர்.

புரட்டாதி-முற்கொழுங்கோல்-நாழி. ஆூ ௩.

உத்தரட்டாதியின்பெயர்.

மூாசு-பிற்கொழுங்கோல்-மன்னன்-அறிவன். ஆூ ௪.

இரேவதியின்பெயர்.

தொழு-நாவாய்-தோணி-சூலம்-பஃறி-புருடநாள்-கடைமீன். ஆூ ௭.

அருந்ததியின்பெயர்.

சாலி-வடமீன். ஆூ ௨.

வான்மீன்பெயர்.

உடு-தாராகணம்-ஒளி. ஆூ ௩.

காலநுட்பத்தின்பெயர்.

துடி-கலை. ஆூ ௨.

நாழிகையின்பெயர்.

கன்னல்-இருத்தை-கடிகை-பதம்-விகலை. ஆூ ௫.

பொழுதின்பெயர்.

வேலை-அமையம்-காலை-பதம்-எல்லை-காலம். ஆூ ௬.

முன்னைநாளின்பெயர்.

நென்னல்-நெருநல். ஆூ ௨.

பின்னைநாளின்பெயர்.

பிற்றை-பின்றை. ஆூ ௨.





சூத்திரம்.

(ாயக)

நண்பகலுச்சி.

(ாயஉ) சூ.

அந்திசந்தி.

(ாயரு) சூ.

யாமஞ்சாமம்.

(ாயச) சூ.

எல்லேபகலாம்.

(ாயரு) சூ.

என்றூழாதபம்வெயிலெனப்படுமே.

(ாயசு) சூ.

நிலவுசந்திரிகையாகுமென்ப.

(ாயஎ) சூ.

எல்லியுங்கங்குலும்யாமமுமாலையு,மல்லுமங்குலுமிராசத்தியுமல்கலும், யாமினியு நிசியுமெல்லுமிரவே.

(ாயஅ) சூ.

நிசியேநத்த நீலந்தனொடு, திமிரமுந் தமமு மிருளாகுமே.

(ாயகூ) சூ.

பகலும்வைகலுந் திவசமுந் திநமு,மாதியமுந்திவாவுநாளாகுமே.

(ாஉய) சூ.

வைகறைவிடியல் புலரியருணோதயம்.

(ாஉக) சூ.

திதியேபக்கம்.

பெயர்ப்பிரிவு.

உச்சியின்பெயர்.

நண்பகல். (க)

சந்தியின்பெயர்.

அந்தி. (க)

சாமத்தின்பெயர்.

யாமம். (க)

பகலின்பெயர்.

எல். (க)

வெயிலின்பெயர்.

என்றூழ்-ஆதபம். ஆூ ௨.

சந்திரிகையின்பெயர்.

நிலவு. (க)

இரவின்பெயர்.

எல்லி-கங்குல்-யாமம்-மாலை-அல்-இராசத்தி-அல்கல்-யாமினி-நிசி-எல். ஆூ ௰.

இருளின்பெயர்.

நிசி-நத்தம்-நீலம்-திமிரம்-தமம். ஆூ ௫.

நாளின்பெயர்.

பகல்-வைகல்-திவசம்-திநம்-ஆதியம்-திவா. ஆூ ௬.

அருணோதயத்தின்பெயர்.

வைகறை-விடியல்-புலரி. ஆூ ௩.

திதியின்பெயர்.

பக்கம். (க)

சூத்திரம்.

(௱௨௨) ———
மதியேதிங்களும்மாதமாகும்
(௱௨௩) சூ.
பக்கமுதலதுநந்தையாகும்
(௱௨௪) சூ.
பத்திரையென்பதிரண்டா
ம்பக்கம்.
(௱௨௫) சூ.
மூன்றேசயைபக்கம்.

(௱௨௬) சூ.
நான்கேயிரித்தை.
(௱௨௭) சூ.
ஐந்தாம்பக்கம்பூரணையாகு
[ம்.
(௱௨௮) சூ.
அரைநாளும்பானாளு மத்த
நாளும்பாதிநாள்.
(௱௨௯) சூ.
கணமேமாத்திரை.
(௱௩௰) சூ.
வேலையென்பது நிகழுங்கா
லம்.
(௱௩௧) சூ.
உருப்பம்வெப்பமாகு மெ
ன்ப.
(௱௩௨) சூ.
வேனில்கோடைப்பெயரே
ராகும்.
(௱௩௩) சூ.
ஒல்லைசிறுவரை சிறு பொழு
தாகும்.

பெயர்ப்பிரிவு.

மாதத்தின்பெயர்.
மதி-திங்கள். ஆ ௨.
முதற்பக்கத்தின்பெயர்.
நந்தை. (௧)
இரண்டாம்பக்கத்தின்பெயர்.
பத்திரை. (௧)

மூன்றாம்பக்கத்தின்பெயர்.
சயை. (௧)

நான்காம்பக்கத்தின்பெயர்.
இரித்தை. (௧)
ஐந்தாம்பக்கத்தின்பெயர்.
பூரணை. (௧)

பாதிநாளின்பெயர்.
அரைநாள்-பானாள்-அத்த
நாள். ஆ ௩.
மாத்திரையின்பெயர்.
கணம். (௧)
நிகழ்காலத்தின்பெயர்.
வேலை. (௧)

வெப்பத்தின்பெயர்.
உருப்பம். (௧)

கோடையின்பெயர்.
வேனில். (௧)

சிறுபொழுதின்பெயர்.
ஒல்லை-சிறுவரை. ஆ ௨.





சூத்திரம்.

(௱௩௪) ———
காரேகூதிர்முன்பனிபின்ப
னி, சீரிளவேனின்முது வேனி
லென்றாங், கிருமூன் றுவகைப்
பருவமவைதா,மாவணிமுதலா
விரண்டிரண்டாக, மேவினதிங்
களெண்ணினர்கொளலே.
(௱௩௫) சூ.
இமமுந் துகிநமுமஞ்சுநீகார
மும்,பனியின்பெயரெனப்பக
ரப்படுமே.
(௱௩௬) சூ.
காரெனுங் காலப்பெயர்சர
ற்காலம்.
(௱௩௭) சூ.
கூதிர்க்காலமுங் குளிர்பனி
க்காலமு, மாகு மென்ப சிசிர
நாளே.
(௱௩௮) சூ.
ஆநியமுமிருதுவும்பருவமா
கும்.
(௱௩௯) சூ.
பருவமும்யாண்டுங்காலமா
கும்.
(௱௪௰) சூ.
ஊழியுமுறையு ளுமுகமாகு
ம்மே.
(௱௪௧) சூ.
ஊழியுமடங்கலு முகமுடி
வாகும்.
(௱௪௨) சூ.
நான்முகன் வாழ்நாள் கற்ப
மாகும்.

பெயர்ப்பிரிவு.

அறுவகைப்பருவமாவன.
கார்-கூதிர்-முன்பனி-பின்
பனி-இளவேனில் - முதுவே
னில். ஆ ௬. இவற்றுள் - ஆவ
ணிமுத லிரண்டிரண்டு மாத
மோரொரு பருவ மெனக்
கொள்க.
பனியின்பெயர்.
இமம்-துகிநம்-மஞ்சு-நீகா
ரம். ஆ ௪.

கார்காலத்தின்பெயர்.
சரற்காலம். (௧)

கூதிர்க்காலத்துக்கும்பனிக்
காலத்துக்கும்பெயர்.
சிசிரநாள். (௧)

பருவத்தின்பெயர்.
ஆநியம்-இருது ஆ ௨.

காலமாவன.
பருவம்-யாண்டு. ஆ ௨.

உகத்தின்பெயர்.
ஊழி-உறையுள். ஆ ௨.

உகமுடிவின்பெயர்.
ஊழி-மடங்கல். ஆ ௨.

நான்முகன்வாழ்நாளின்பெயர்
கற்பம். (௧)

சூத்திரம்.

(௱௪௩) ———
ஆயுளாயுகம்வாழ்நாளென்ப.

(௱௪௪) சூ.
மேக்குவலமீயும்பர் மேலா
கும்.

(௱௪௫) சூ.
கிழக்குக்கீழே.

(௱௪௬) சூ.
துவலைபெயலை துளியேமா
ரி,யுறைபெயலாலியுதகஞ் சித
றி, தூவல்சீகரந்தூறல்வருடம்.

(௱௪௭) சூ.
மேகஞ்சீதம் விசும்பு வான்
விண் முகில், கொண்மூ மஞ்சு
கொண்டன்மைம்மழை,எழிலி
கார்குயின்கந்தரம்விண்டு, மங்
குன்மால்செல்கநமும்வாரியா
[ர்.

(௱௪௮) சூ.
உருமுஞ் செல்லுமசநியு மு
ருமேறு, மிடியும் வானேறுமி
டியேற்றின்பெயரே.

(௱௪௯) சூ.
தலையலென்பதுமழைபெய்
துவிடுதல்.

(௱௫௰) சூ.
சோனையும் பனித்தலும் வி
டாதுசொரிதல்.

(௱௫௧) சூ.
ஆசாரமென்பதுபெருமழை
யாகும்.

பெயர்ப்பிரிவு.

வாழ்நாளின்பெயர்.
ஆயுள்-ஆயுகம். ஆ௨.

மேலின்பெயர்.
மேக்கு-வலம்-மீ-உம்பர்-
ஆ௪.

கீழின்பெயர்.
கிழக்கு. (க)

வருடத்தின்பெயர்.
துவலை-பெயலை-துளி-மா
ரி-உறை-பெயல்-ஆலி-உதக
ம்-சிதறி-தூவல்-சீகரம்-தூ
றல். ஆ௰௨.

மேகத்தின்பெயர்.
சீதம்-விசும்பு-வான்-விண்-
முகில்-கொண்மூ-மஞ்சு-கொ
ண்டல்-மை-மழை-எழிலி-கா
ர்-குயின்-கந்தரம்-விண்டு-ம
ங்குல்-மால்-செல்-கநம்.
ஆ௰௯.

இடியேற்றின்பெயர்.
உருமு-செல்-அசநி-உரு
மேறு-இடி-வானேறு.
ஆ௬.

மழைபெய்துவிடுதலின்பெய
தலையல். (க) [ர்.

விடாதுசொரிதலின்பெயர்.
சோனை-பனித்தல். ஆ௨.

பெருமழையின்பெயர்.
ஆசாரம். (க)





சூத்திரம்.

(௱௫௨) ———
தளிபெயலாலியுறை துளி
யாகும்.

(௱௫௩) சூ.
ஆலியாலங்கட்டியாகும்.

(௱௫௪) சூ.
சீகரம்பிதிரோசிதரரிசிகரந்,
தூவலென்றிவை துவலையாகும்

(௱௫௫) சூ.
தடித்துத்தடிமின்.

(௱௫௬) சூ.
இடிப்பெயரிகுளே.

(௱௫௭) சூ.
ஊர்கோள்வட்டம்பரிவேட
ப்பெயரே.

(௱௫௮) சூ.
வானவிலிந்திரவில்லெனவ
றைவர்.

(௱௫௯) சூ.
காமன் காண்டீவங்கருப்பு
வில்லாகும்.

பெயர்ப்பிரிவு.

துளியின்பெயர்.
தளி-பெயல்-ஆலி-உறை.
ஆ௪.

ஆலங்கட்டியின்பெயர்.
ஆலி. (க)

துவலையின்பெயர்.
சீகரம்-பிதிர்-சிதர்-அரி-சி
கரம்-தூவல். ஆ௬

மின்னின்பெயர்.
தடித்து-தடி- ஆ௨.

இடியின்பெயர்.
இகுள். (க)

பரிவேடத்தின்பெயர்.
ஊர்கோள்-வட்டம். ஆ௨.

இந்திரவில்லின்பெயர்.
வானவில். (க)

காமன்காண்டீவத்தின்பெயர்.
கருப்புவில். (க)

திவாகரவரலாறு.

வடநூற்கரசன்றென்றமிழ்க்
கவிஞன்,கவியரங்கேற்றுமுப
யகவிப்புலவன், செறிகுணத்த
ம்பற் கிழவோன் சேந்த, னறி
வுகரியாகத்தெரிசொற்றிவாகர
த்து,முதலாவதுதெய்வப்பெ
யர்த்தொகுதிமுற்றிற்று.